[1969 மார்ச் 11]

**திரு. கே. விநாயகம் :** அறிக்கையிலே விவசாயத்தில் விஞ்ஞானத்தின் மூலம் முன்னேற்றம் எப்படி எப்படி எல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அதைப் பயன்படுத்தியதின் விளைவாக என்ன என்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன, விவசாயத்திலே என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது, அரசாங்கத்திற்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது, சமுதாயத்திற்கு என்ன கிடைத்தது என்பதை மந்திரியவர்கள் விவரிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் கிராமப்புறத்திலே சென்று இம்மாதிரியான விவசாயத்திட்டங்களைப்பற்றித் தெரிந்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலே ஏதாவது நன்மை இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக அவர்கள் சொல்வார்கள். நம்முடைய கருத்திருமன் அவர்களைக் கேட்டாலே அவர்களே சொல்வார்கள். திரு. விநாயகம் அவர்கள் சென்னையிலிருந்து கொண்டு அந்த விவரத்தைக் கேட்பதைவிட கிராமத்திற்குச்சென்று அவர்களுடைய தொகுதிக்குச் சென்று சுற்றிப்பார்த்தால் தெரியும். உண்மையிலேயே விவசாயிகள் எவ்வளவு உரம் போடவேண்டும், பயிர்ப் பாதுகாப்புக்கு என்ன என்ன செய்ய வேண்டும், புதிய பொறுக்கு விதைகளை எப்படிப் போடவேண்டும், எந்த அளவுக்கு எந்தக் காலத்தில் உரத்தைப் பயன்படுத்தவேண்டுமென்பதையெல்லாம் சொல்லிக் கொடுக்கிறோம். அதை தனியாகவும் சொல்கிறார்கள், கூட்டாகவும் சொல்கிறார்கள். கருத்தரங்குகளிலும் நல்ல கருத்துக்களைச் சொல்கிறார்கள். அங்கே கேட்கப்படுகிற விஷயங்களுக்கு விவசாய அதிகாரிகள் பதில் அளிக்கிறார்கள். கிராமங்களுக்கு அந்த அதிகாரிகள் போகவில்லையென்றால் ஏன் போகவில்லை என்று கேட்கிறோம். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் என்று அவர்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் அவர்கள் அரைக்கால் சட்டை அணிந்து செல்கிறார்கள். இதைப்பற்றிக் குறைபாடுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உண்மையிலேயே பல நன்மைகளை இதன் மூலம் செய்கிறோம். வானொலி மூலமாகச் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பிரச்சாரத்தையாவது திரு. விநாயகம் அவர்கள் கேட்கவேண்டும். அவர்கள் கேட்டு மற்றவர்களுக்கு அதைப் பிரச்சாரம் செய்யப் பயன்படுத்தலாம்.

### வட ஆர்க்காடு மாவட்ட ஒழுங்கு முறை விற்பனை கூடம்

*271. வினு.—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் அதிக வரி அல்லது செஸ் நியாயமற்ற முறையில் வசூலிக்கப்படுவது குறித்து அரக்கோணம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அனுப்பிய 13-4-1968-ந் தேதிய கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அரக்கோணம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி, வேளாண்மை இயக்குநருக்கு எழுதிய 13-4-1968 தேதியிட்ட கடிதத்திற்கு, வேளாண்மை இயக்குனரிடமிருந்து கடித எண் எம்.கே.டி. ஒ.மு. 135324/64, தேதி 30-5-1 68-ல் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செஸ் என்ற பெயராலே எவ்வளவு ஒவ்வொரு வரிடத்திலும் வசூல் செய்திருக்கிறார்கள். அது எந்த வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் எழுதியிருந்த கடிதத்திற்குக் காப்பி இருந்தால் அவர்கள் அதைத் திருப்பி ஒருமுறைப் படித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் 25 ஆயிரம் ரூபாய் தக்கோலத்திலிருந்து வசூல்

செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். முழு விவரம் கேட்ட அளவிலே தெரியவருவது என்னவென்றால், செஸ் என்ற பெயராலே வசூலிக்கப்பட்ட தொகை, பனப்பாக்கம், பரஞ்சி, நெமிலி ஆகிய மூன்று ஊர்களிலும் 1967–68-ம் ஆண்டிற்கு 15,576·53 பைசா என்று இருக்கிறது. இதிலே மற்ற அயிட்டங்களும் இருக்கின்றன. புரோக்கர் பீஸ், லைசென்ஸ் பீஸ் என்று 6,602·30 ரூபாய் இருக்கிறது. தக்கோலத்திலிருந்து 2,268·80 வந்திருப்பதாகத் தெரிகிறது. கடந்த எப்ரல், மே, ஜூன் மாதங்களிலே தக்கோலத்திலிருந்து வசூலான தொகை 1,112·90 என்று இருக்கிறது. திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் கேட்டதில் குறிப்பிட்டு இருப்பது தக்கோலமே 25 ஆயிரம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற புள்ளிவிவரத்திற்கும் இதற்கும் நிறைய மாறுபாடு இருக்கிறது. இது மொத்த வியாபாரிகளிடமிருந்தும் சில்லரை வியாபாரிகளிடமிருந்தும் டெகாடிகேட் ஓனர்களிடமிருந்தும்தான் வசூல்செய்யப்படுகிறது. வட ஆர்க்காட்டிலிருந்து மணிலாவை சென்னைக்கும் மற்ற இடங்களுக்கும் எடுத்துவருகிறார்கள். மிடில் மென் இதற்காக ஏற்பாடு செய்து கடனைக் கொடுத்து செஸ் கொடுக்காமல் தவறான முறையிலே எடுத்துச்சென்றால் வழியிலே மறித்து உண்மையான வியாபாரமா என்று பரிசீலனை செய்கிறார்கள். திரு. எஸ். ஜே. ராமசாமி போன்ற வியாபாரிகள் செய்தால் நிச்சயமாக செஸ் வரி வசூல் செய்யமாட்டார்கள். ஆனால் தரகர்கள் எடுத்துச்செல்கின்றபொழுது யாராய் இருந்தாலும் அதற்கு செஸ் வரி வசூல் செய்யப்படுகிறது.

### *Supply of fertilisers in Damaneri and Rangapuram Panchayats.*

272. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that fertilisers like Ammonium Sulphate and Urea are not made available to the farmers of Damaneri and Rangapuram Panchayats in Ramakrishnarajupet Panchayat Union, Tiruttani taluk, Chingleput district ; and

(*b*) if so, the steps taken to rectify this defect ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) இல்லை, மொத்தம் கிடைத்த உர அளவையொட்டி முடிந்த அளவிற்குக் கடந்த ஆண்டில்
ம.ப 10–00 1967–68) உரம் வழங்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து அனுமதிச் சீட்டுப்பெறுமல் உழவர்களுக்கு அமோனியம் சல்பேட்டும் யூரியா உப்பும் கூட்டுறவுச் சங்கங்கள் விற்கலாமென 1968, மே திங்களில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளை பிறப்பித்தார். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் எவரும் உரம் கிடைக்காமல் இடர்ப்பாடு அடைந்ததாக கூறவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. விநாயகம் :** நான் கேள்வி கேட்ட நேரத்தில் யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள் அந்த இரண்டு ஊர்களுக்கும் கிடைக்காத நிலை இருந்தது. அந்த இரண்டு ஊர்களுக்கும் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்து போக வேண்டுமென்றால் மலைகளைச் சுற்றி குறைந்தது 15 மைலுக்கு மேல் போகவேண்டியிருக்கிறது. அப்போது மக்கள் உரம் வந்து சேரவில்லை என்று கேட்ட காரணத்தால்தான் கேள்வி போட்டேன். இப்போதாவது அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு உரம் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது உரம் நிறையத் தேங்கியிருக்கிறது. உரம் இல்லாத பகுதியே கிடையாது. உரத்தை எப்படியாவது விற்க வேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. கனம் விநாயகம் அவர்கள் பிரச்சாரம் செய்து உரத்தை விற்பதற்கு வழி செய்ய